# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2012/2013 (2016 – ஒக்டோபர் / நவம்பர்)

## EDS - 2223 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும் (Child Growth and Study)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏதாவது நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. (அ) பிள்ளை விருத்தியடையும் போது விருத்தியுடன் நான்கு வகையான பண்புகள் தோன்றுவது இயல்பானதாகும் இந்நான்கு வகையான பண்புகளையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

(ஆ) பிள்ளை விருத்தி பற்றிய பல்வேறு கொள்கைகளுள் உயிரி-சூழல் இடைத்தாக்கக் கொள்கை பற்றி பியாஜே கூறிய கருத்துக்கள் தொடர்பாக குறிப்பிடுக?

(8 புள்ளிகள்)

(இ) சிக்மன்பிராய்ட் குறிப்பிடும் பிள்ளை விருத்தியின் ஐந்து முக்கிய உள பாலியல் கட்டங்களையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (9 புள்ளிகள்)

2. அ) பிள்ளையின் ஆளுமை, நுண்ணறிவு விருத்திகளில் பரம்பரை எந்தளவிற்குச் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை ஆராய்க. (9 புள்ளிகள்)

ஆ) ''வளர்ச்சி முதிர்ச்சி கற்றல் ஆகிய உடல் தொழிற்பாடுகள் சூழல், பரம்பரை ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டன'' பிள்ளை விருத்தியில் இவை கொண்டுள்ள இடைத்தொடர்புகள் எத்தகையவை என்பதனை விளக்குக.(9 புள்ளிகள்)

(இ) பிள்ளையின் கற்றலுக்கான ஆயத்த நிலையானது கற்றல் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனை எடுத்துக்காட்டுக?

(7புள்ளிகள்)

அ) பிறப்பிற்கு முன்னான விருத்தி நிலையில் முளைய நிலைப் பருவத்தில் நிகழும் முக்கிய செயற்பாடுகள் பற்றி விளக்குக? (9 புள்ளிகள்)

ஆ) முதிர் மூலவுருவில் பிறப்புரிமையின் செல்வாக்குக் காரணமாக ஏற்படும் குறைபாடுகளில் தவறான அல்லது பூரணமற்ற பால் நிறமூர்த்தப் பிரிகையினால் ஏற்படும் குறைபாடே கிளின்பெல்டர் குறைபாடு எனப்படுகின்றது (Kilnefelter's Syndrome). இக்குறைபாடு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனை தெளிவு படுத்துக.

(8 புள்ளிகள்)

(இ) பிறப்பிற்கு முன்னுள்ள விருத்தியில் சமூக வகுப்பு வேறுபாடுகள் பெறும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் காட்டுக. (8 புள்ளிகள்)

4. அ) "பிள்ளை வளர்ப்பு நடைமுறைகளைத் தீர்மானிப்பதில் பெற்றோரின் நடத்தையின் இரு பரிமாணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.'' இந்த வகையில் ஏற்றுக்கொள்ளல் மறுத்தல், சுதந்திரம் - கட்டுப்பாடு என்பவனவற்றைப் பெற்றோருடன் தொடர்புபடுத்தி விளக்குக. (13 புள்ளிகள்)

ஆ) பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியில் சமூக விளையாட்டுக்களின் பங்களிப்புக்கள் மிகவும் இன்றியமையாதவையாகும். இக்கூற்றினை சுருக்கமாக ஆராய்க. (12 புள்ளிகள்)

5. அ). மனவெழுச்சி என்றால் என்ன? என்பதனைத் தெளிவுபடுத்தி மனவெழுச்சி பற்றி புலோமின் (1985) கூறிய உடல் மாற்றம் (அக ரீதியான துலங்கல்), உளவியல் மாற்றம் (அறிவு சார்ந்த எதிர்த்தாக்கம்) என்பன பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கம் தருக? (13 புள்ளிகள்)

ஆ) நீர் சமூகமளித்த முன்பள்ளியை ஆதாரமாகக் கொண்டு பாடசாலைப் புகாநிலை பிள்ளைகளிடத்தே எழுகின்ற எதிர்மறையான மனவெழுச்சிப் பண்புகளை முன்பள்ளி ஆசிரியரொருவர் எவ்வாறு கற்றலுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றார் என்பதனை ஆராய்க? (12 புள்ளிகள்)

6. அ). பிள்ளையின் ஆளுமை விருத்தியில் தனியாள் வேறுபாடுகளைப் பற்றி அல்பேட் பந்தூரா கூறிய சமூகக் கற்றல் அணுகுமுறைக் கருத்துக்கள், கற்றலில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க? (13 புள்ளிகள்)

ஆ) எரிக் எரிக்சனினால் முன்வைக்கப்பட்டுள்ள குழந்தை பிறந்ததிலிருந்து 41 வயது வரையான விருத்திப் பரம்பலின் 8 நிலைகளிலும் விருத்தி செய்யப்படும் அகப் பண்புகள் நடவடிக்கைகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக? (12 புள்ளிகள்)